**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1410/2022 P.W.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பழனியப்பன் | த–பெ | வெள்ளைசாமி |
| ஊர்: | : | ஆத்தங்குடி | | |
| வயது: | : | 36/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஓட்டுநர் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் ஆத்தங்குடியில் வசித்து ஓட்டுநராக பணி செய்து வருகிறேன். எனது தகப்பனார் 10 வருடமாக ஆத்தங்குடியில் உள்ள பெருமாள் மேஸ்திரி என்பவரிடம் வீட்டு வேலை பார்த்து வந்தார். 01.02.2020 அன்று காலை 6.00 மணிக்கு எங்கள் வீட்டில் இருந்த கிளம்பி ஆத்தங்குடியில் உள்ள பெருமாள் மேஸ்திரி என்பவர் வீட்டிற்கு சென்று விட்டார். அன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு வேலை முடித்து விட்டு வீட்டிற்கு வந்து விட்டார். மீண்டும் அரை மணி நேரம் கழித்து அவர் வீட்டிற்கு வேலை செய்வதற்காக சைக்கிளில் சென்று விட்டார். இரவு 9.00 மணியளவில் எனது தாயாருக்கு போன் செய்து வேலை நடந்து கொண்டிருப்பதாகவும் இதனால் நான் வர தாமதம் ஆகும் என்றும் சொன்னார். மறு நாள் விடியற்காலை 6.00 மணியளவில் பெருமாள் மேஸ்திரியின் மகள் முத்து மீளாள் எனது மனைவிக்கு செல் போனில் தொடர்பு கொண்டு வயலில் உள்ள எனது தகப்பானாருக்கு காது, மூக்கு இரத்தம் வழிந்து அங்கு இருப்பதாக சொன்னார். இதனை கேள்விப்பட்ட நான் எனது மனைவி முருகேஷ்வரி, எனது தம்பி பரமசிவம், ஆகியோர் அங்கு சென்று பார்த்த போது எனது தகப்பனார் இறந்து கிடந்தார். மீண்டும் திருமயம் குட்டி ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்ற போது அங்கியிருந்த மருத்துவர்கள் எனது தகப்பனாருக்கு தலையில் அடிப்பட்டு இறந்து விட்டதாக சொன்னார்கள். பின்னர் மதியம் 12.00 குன்றக்குடி காவல் நிலையம் சென்று நடந்த விவரங்களை சொல்லி நடவடிக்கை எடுக்குமாறு எனது தம்பி புகார் அளித்தார். போலீசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள். மேற்படி விபத்தானது அன்றைய தினம் சரவணன் என்பவர் டிராக்டரை ஓட்டி எனது தகப்பனாருக்கு விபத்தை ஏற்படுத்தினார் என்று நான் கேள்விப்பட்டு தெரிந்து கொண்டேன்.

**குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் ITI படித்துள்ளேன். நான்போலீஸ்விசாரணையில் எனது தகப்பனாரை சம்பவயிடத்தில் பார்த்த போது எங்கு எல்லாம் காயம் எற்பட்டிருந்தது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். பொதுவாக வயலில் கதிர் அறுக்கும்வேலையில் 10 க்கும் மேற்பட்ட நபர்கள் வேலை பார்ப்பார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று சம்பவ இடத்திற்கு சென்று எனது தகப்பனாருடன் யார் யார் வேலை பார்த்தார்கள் என்று கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு நிலத்தின் உரிமையாளர் பெருமாள் மேஸ்திரி வரவில்லை என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை அவர் மகள் தான் இருந்தார். எனக்கு தகவல் சொன்ன முத்து மீனாள், டிராக்டர் வாகனத்தால் தான் எனது தகப்பனார் இறந்தார் என்று தகவல் சொன்னாரா என்றால் இல்லை. எனது தகப்பனாருக்கு மது குடிக்கும் பழக்கம் உண்டு என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரி வாகனத்தை இயக்கி எனது தகப்பானார் இறக்கவில்லை எனது தகப்பனார் மது போதையில் எங்கோ அடிப்பட்டு சம்பவயிடத்தில் வந்து இறந்து விட்டார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் எங்கள் குடும்பத்திற்கும் எந்த முன் விரோதமும் கிடையாது என்றால் சரிதான். எதிரி வீடும் எங்களது வீடும் அடுத்தடுத்த வீடும் என்றால் எதிரி வீடும் எனது வீடும் அடுத்தடுத்த வீடு. எனது தகப்பனார் வீடு சிறு துாரத்தில் உள்ளது. நான் சொல்வது போல் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை வழக்கில் இறந்த எனது தகப்பனாருக்கு இழப்பீடு தொகை பெற வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது சகோதரர் கொடுத்த பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.17 10:17:42 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1410/2022 P.W.2**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பஞ்சவர்ணம் | க–பெ | வெள்ளைச்சாமி |
| ஊர்: | : | ஆத்தங்குடி | | |
| வயது: | : | 55/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | கூலி வேலை | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் ஆத்தங்குடியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். எனது கணவர் 10 வருடமாக ஆத்தங்குடியில் உள்ள பெருமாள் மேஸ்திரி என்பவரிடம் வீட்டு வேலை பார்த்து வந்தார். 01.02.2020 அன்று காலை 6.00 மணிக்கு எங்கள் வீட்டில் இருந்த கிளம்பி ஆத்தங்குடியில் உள்ள பெருமாள் மேஸ்திரி என்பவர் வீட்டிற்கு சென்று விட்டார். அன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு வேலை முடித்து விட்டு வீட்டிற்கு வந்து விட்டார். மீண்டும் அரை மணி நேரம் கழித்து அவர் வீட்டிற்கு வேலை செய்வதற்காக சைக்கிளில் சென்று விட்டார். இரவு 9.00 மணியளவில் எனக்கு போன் செய்து வேலை நடந்து கொண்டிருப்பதாகவும் இதனால் நான் வர தாமதம் ஆகும் என்றும் சொன்னார். மறு நாள் விடியற்காலை 6.00 மணியளவில் பெருமாள் மேஸ்திரியின் மகள் முத்து மீளாள் எனது மருமகளுக்கு செல் போனில் தொடர்பு கொண்டு வயலில் உள்ள எனது கணவருக்கு வாய், மூக்கு இரத்தம் வழிந்து அங்கு இருப்பதாக சொன்னார். இதனை கேள்விப்பட்ட நான் எனது மருமகள் முருகேஷ்வரி, எனது மகன் பரமசிவம், ஆகியோர் அங்கு சென்று பார்த்த போது எனது கணவர் இறந்து கிடந்தார். மீண்டும் திருமயம் குட்டி ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்ற போது அங்கியிருந்த மருத்துவர்கள் எனது கணவருக்கு தலையில் அடிப்பட்டு இறந்து விட்டதாக சொன்னார்கள். பின்னர் மதியம் 12.00 குன்றக்குடி காவல் நிலையம் சென்று நடந்த விவரங்களை சொல்லி நடவடிக்கை எடுக்குமாறு எனது மகன் புகார் அளித்தார். போலீசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள். மேற்படி விபத்தானது அன்றைய தினம் வெல்லூாரை சேர்ந்த சரவண குமார் என்பவர் டிராக்டரை ஓட்டி எனது கணவருக்கு விபத்தை ஏற்படுத்தினார் என்று நான் கேள்விப்பட்டு தெரிந்து கொண்டேன்.

## குறுக்கு விசாரணை

எனக்கு எழுத படிக்க தெரியாது. எனது கணவரை இறந்தது சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை என் மகள்களை தான் விசாரணை செய்தார்கள். நான் சம்பவம் கேள்விப்பட்டு எனது கணவரை சம்பவயிடத்தில் பார்த்த போது எங்கு எல்லாம் காயம் எற்பட்டிருந்தது என்றால் தலையிலும், காலிலும் காயம் ஏற்பட்டிருந்தது அந்த விசயத்தை நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. பொதுவாக வயலில் கதிர் அறுக்கும்வேலையில் 10க்கும் மேற்பட்ட நபர்கள் வேலை பார்ப்பார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று சம்பவ இடத்திற்கு சென்று எனது கணவருடன் யார் யார் வேலை பார்த்தார்கள் என்று கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் மீனாள் மட்டும் தான் சம்பவ இடத்தில் இருந்ததை நான் கேட்டு தெரிந்து கொண்டேன். வேறு யாரு இருந்தார்கள் தெரியாது. சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு நிலத்தின் உரிமையாளர் பெருமாள் மேஸ்திரி வரவில்லை என்று தெரிந்து கொண்டேனா என்றால் சரிதான். அவர் மகள் தான் இருந்தார். எனக்கு தகவல் சொன்ன முத்து மீனாள், டிராக்டர் வாகனத்தால் தான் எனது கணவருக்கு இறந்தார் என்று தகவல் சொன்னாரா என்றால் ஆமாம். எனது கணவருக்கு மது குடிக்கும் பழக்கம் உண்டு என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரி வாகனத்தை இயக்கி எனது கணவர் இறக்கவில்லை எனது கணவர் மது போதையில் எங்கோ அடிப்பட்டு சம்பவயிடத்தில் வந்து இறந்து விட்டார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் எங்கள் குடும்பத்திற்கும் எந்த முன் விரோதமும் கிடையாது என்றால் சரிதான். எதிரி வீடும் எங்களது வீடும் அடுத்தடுத்த வீடும் என்றால் எதிரி வீடும் எனது மகன் வீடும் அடுத்தடுத்த வீடு என்றால் சரிதான். எனது வீடு சிறு துாரத்தில் உள்ளது. நான் சொல்வது போல் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை வழக்கில் இறந்த எனது கணவருக்கு இழப்பீடு தொகை பெற வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது மகன் கொடுத்த பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.17 19:17:49 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1410/2022 P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | முருகேஷ்வரி | க–பெ | பழனியப்பன் |
| ஊர்: | : | ஆத்தங்குடி | | |
| வயது: | : | 28/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026**

**எதிரி ஆஜர்.**

---------------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் ஆத்தங்குடியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். எனது மாமனார் 10 வருடமாக ஆத்தங்குடியில் உள்ள பெருமாள் மேஸ்திரி என்பவரிடம் வீட்டு வேலை பார்த்து வந்தார். 01.02.2020 அன்று காலை 6.00 மணிக்கு எங்கள் வீட்டில் இருந்த கிளம்பி ஆத்தங்குடியில் உள்ள பெருமாள் மேஸ்திரி என்பவர் வீட்டிற்கு சென்று விட்டார். அன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு வேலை முடித்து விட்டு வீட்டிற்கு வந்து விட்டார். மீண்டும் அரை மணி நேரம் கழித்து அவர் வீட்டிற்கு வேலை செய்வதற்காக சைக்கிளில் சென்று விட்டார். இரவு 9.00 மணியளவில் எனது மாமியாருக்கு போன் செய்து வேலை நடந்து கொண்டிருப்பதாகவும் இதனால் நான் வர தாமதம் ஆகும் என்றும் சொன்னார். மறு நாள் விடியற்காலை 6.00 மணியளவில் பெருமாள் மேஸ்திரியின் மகள் முத்து மீளாள் எனக்கு செல் போனில் தொடர்பு கொண்டு வயலில் உள்ள எனது மாமனாருக்கு காது, மூக்கு இரத்தம் வழிந்து அங்கு இருப்பதாக சொன்னார். இதனை கேள்விப்பட்ட நான் மற்றும் எனது கணவர், எனது கொழுந்தனார் பரமசிவம், ஆகியோர் அங்கு சென்று பார்த்த போது எனது மாமனார் இறந்து கிடந்தார். மீண்டும் திருமயம் குட்டி ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்ற போது அங்கியிருந்த மருத்துவர்கள் எனது மாமனாருக்கு தலையில் அடிப்பட்டு இறந்து விட்டதாக சொன்னார்கள். பின்னர் மதியம் 12.00 குன்றக்குடி காவல் நிலையம் சென்று நடந்த விவரங்களை சொல்லி நடவடிக்கை எடுக்குமாறு எனது கொழுந்தனார் புகார் அளித்தார். போலீசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரணை செய்தார்கள். மேற்படி விபத்தானது அன்றைய தினம் சரவணன் என்பவர் டிராக்டரை ஓட்டி எனது மாமனாருக்கு விபத்தை ஏற்படுத்தினார் என்று நான் கேள்விப்பட்டு தெரிந்து கொண்டேன்.

குறுக்கு விசாரணை

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்பு படித்துள்ளேன். நான் போலீஸ்விசாரணையில் எனது மாமனாருக்கு சம்பவயிடத்தில் பார்த்த போது எங்கு எல்லாம் காயம் எற்பட்டிருந்தது என்று சொல்லவில்லை என்றால் காது மற்றும்மூக்கில் இரத்தம் வந்தது என்று நான் சொன்னேன். பொதுவாக வயலில் கதிர் அறுக்கும்வேலையில் 10க்கும் மேற்பட்ட நபர்கள் வேலை பார்ப்பார்கள் என்றால் சரிதான். சம்பவத்தன்று எனது மாமனார் கதிர் அருப்பதற்கு தான் சென்றார் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று சம்பவ இடத்திற்கு சென்று எனது மாமனாருடன் யார் யார் வேலை பார்த்தார்கள் என்று கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு நிலத்தின் உரிமையாளர் பெருமாள் மேஸ்திரி வரவில்லை என்று தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை அவர் மகள் தான் போன் செய்து சொன்னார் ஆனால் அவர் சம்பவயிடத்தில் இல்லை. எனக்கு தகவல் சொன்ன முத்து மீனாள், டிராக்டர் வாகனத்தால் தான் எனது மாமனார் இறந்தார் என்று தகவல் சொன்னாரா என்றால் சரிதான். எனது மாமனாருக்கு மது குடிக்கும் பழக்கம் உண்டு என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரி வாகனத்தை இயக்கி எனது மாமனார் இறக்கவில்லை எனது மாமனார் மது போதையில் எங்கோ அடிப்பட்டு சம்பவயிடத்தில் வந்து இறந்து விட்டார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் எங்கள் குடும்பத்திற்கும் எந்த முன் விரோதமும் கிடையாது என்றால் சரிதான். எதிரி வீடும் எங்களது வீடும் அடுத்தடுத்த வீடும் என்றால் எதிரி வீடும் எனது வீடும் அடுத்தடுத்த வீடு என்றால் சரிதான். எனது மாமனார் வீடு சிறு துாரத்தில் உள்ளது. நான் சொல்வது போல் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை வழக்கில் இறந்த எனது மாமனாருக்கு இழப்பீடு தொகை பெற வேண்டும் என்ற நோக்கத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது கொழுந்தனார் கொடுத்த பொய் வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.17 10:17:55 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.